முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19 திகதி முதல்
சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26 திகதி வரை
(05.11.2023 ஞாயிறு முதல் 12.11.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தரும வேலி கொண்ட அரங்கா
   தவபலம் கொண்ட தேசிகா
   முருகப் பெருமான் சக்தியாக வந்த
   முழுமை கண்ட ஞானியே உமைபோற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷியும்
   புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
   உற்றதொரு சோபகிருது துலைதிங்கள்
   உயர்வான மூவாறோர் திகதிமேல் இருபானாற் திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசி உரைப்பேன்
   திரைமறைவாக நடக்கும் அவலங்கள்
   தேசமதில் வெளிக் கொணரப்பட்டு
4. பட்டுமே தீவினை செய்தவர்கள்
   பாவிகளென அரச தண்டனைக்கு
   ஆட்பட்டு கௌரவம் ஆஸ்தி
   அமைதியையும் தொலைக்க நேரும்
5. நேருமை கொண்ட செயல்பாடுகள்
   நிலவுலகில் கண்டு தொடருபவர்களே
   வருமுலகில் அரசியல் களமதை
   வலிமைபட கொண்டு தொடர நேரும்
6. நேருமைபட இனியேனும் கழகங்கள்
   நிர்வாகிகள் அதிகாரிகள் என
   தருமத்தை கடைபிடித்துக் காத்து
   தயவான செயல்வடிவம் காண

7. காணவே இனமொழி மதவழி
காணுகின்ற பாகுபாடு விலகி
ஞானவாழ்வாக ஞான உலகாக
நம்பகம் பெருகிட மாற்றமதும்
8. மாற்றமதும் அரங்க மகானின்
மகத்துவமான அவதாரம் வழி
ஆற்றல்பட இந்தியா தமிழகம்
அடைந்து பாதுகாப்பை காணும்
9. காணும் வளர்ச்சிப் பணிகளாக
கடமை தவறாத வண்ணம்
ஞானவான்கள் நிறைந்தபடியே
நாட்டிடுவேன் எல்லாத் துறைகளும்
10. துறைகளும் வளர்ச்சி கண்டு
தெய்வஞான பலம் கொண்ட
நிறைவான ஆட்சிக் காலமாக
நீதி குன்றா ஆளுமையாக சிறக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

தருமத்தின் சக்தியை அன்பர்களை காக்கின்ற தருமவேலியாக அமைத்து காக்கின்ற அரங்க மகா தேசிகரே எல்லையில்லாது தவங்களை செய்து வெற்றி கண்டு தவபலம் மிக்க கொண்ட ஞானதேசிகரே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக இவ்வுலகினில் அவதரித்து முழுமையான வெற்றி கண்ட மகா ஞானியே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

திரைமறைவாக நடக்கின்ற அவலங்களை எல்லாம் தேசமெங்கும் வெளிப்பட்டு தீமை செய்தவர்கள் எல்லாம் பாவம் செய்தவர்களாக அரசினால் வெளிப்படுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாகி அவரவரின் கௌரவத்தை இழந்து தீமையான வழிகளிலே சேர்த்த சொத்துக்களையும் இழந்து அவர்களது வாழ்வின் அமைதியையும் இழந்து தவிப்பார்கள்.

நேர்மையுடன் செயல்படுகின்றவர்களே இனி உலகினில் தொடர்ந்து செயல்பட முடியுமப்பா.

ஆகவே இனிமேல் ஆயினும் பொறுப்பில் உள்ளவர்கள், அதிகாரிகள் என அனைவரும் தருமத்தை கடைப்பிடிப்பதோடு தர்மத்தை காத்து வருவதுடன் தயவின் அடிப்படையில் செயல்பட்டு வரவர இனம், மொழி, மதம் பாகுபாடுகள் எல்லாம் விலகி செயல்பட்டு ஞானவாழ்வினை வாழ்வதுடன் இந்த உலகை ஞான உலகாக மக்களின் நம்பிக்கையை பெற்ற உலகமாக உலக மாற்ற மகாஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனாரின் அருளாசியுடன் ஆற்றல் பெற்று அருள் பாதுகாப்பையும் பெற்று மாற்றம் அடையுமப்பா.

நாடெங்கும் வளர்ச்சி பணிகளே நடந்தேறும் ஞானவான்கள் நாடெங்கும் நிறைந்து இருப்பார்கள் எல்லா துறைகளும் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்து தெய்வஞான பலம் கொண்ட நிறைவான ஆட்சியாக நீதி குன்றாத ஞானஆட்சியாக மாறி சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–